Sugu, one of your personal traits you are leaving in this physical world is your 'all pervasive love', love like the ripples in the pond that moves in concentric circles, encircling the family, relatives, friends, community and humanity at large - the ripples that will go on for ever even though it may not be visible.

When one of your neighbours commented 'They are a nice couple' I was about to say 'They are Brahmins'. Endowed with 'peacefulness, self-control, austerity, purity, tolerance, honesty, knowledge, wisdom and religiousness' the characteristics of Brahmanas (BG 18:43, it is natural for you and Lalitha to be 'A nice couple'.

The first time I became aware of the nature and depth of you love for your 'Acca' Kohilam was the day you left for the UK for higher studies. Then Kohilam was in Australia. When I came to take leave of you, for that evening I was to travel back to Jaffna, you said 'My flight is tonight, would not you be there to see me off?' I felt the impact; it was the echo of your love for your sister - pure, untainted love of an innocent child for the mother entwined with the love for a caring affectionate sister.

It may sound blunt; it is a 'cruel twist of fate' that has deprived your sister from taking part in your 'last ritual'.

I hope, religiousness and spirituality, a natural quality of your family will see them through this difficult time and accept to live with their pain of this 'temporary separation'.

**- Mathi Acca**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபதம் அடைந்த ஸ்ரீ ராமஸ்வாமி ஐயர் சுப்ரமணியம் அவர்களுக்கு எமது ஆத்ம சாந்தி அஞ்சலி

ஈழத்திபத்தின் தலையான நல் யாழ்பாணத்தில்
அருமறை ஓதும் அந்தணர் குலம் தழைக்க
ஆத்ரேய கோத்திரத்தில் அமரர் ராமஸ்வாமி ஐயர் ருக்மணி அம்மாள்
ஈன்றுஉவந்த ஆறு நல் மழலைகளில்
கனிஷ்ட புத்திரனாய் சீர்புகழ் நல்லூரில் அவதரித்து
ஆரம்ப கல்விதனை மங்கயர்கரசி வித்யாசாலையிலும்
பின், பரமேஸ்வரா, யாழ் இந்து கல்லூரிகளில் உயர் கல்வி பயின்று,
பேராதனை பல்கலைகழகத்தில் பொறியியல் கற்று நற்சான்றோன் ஆனாய்.

மங்கள திங்கள் புரட்டாதி 4—ம் நாளில்
இனிய நல்லூரில் மாதவம் தரித்த மரபு வழிவந்த
சிரோன்மணி சீதாராம சாஸ்திரிகள் கரம்பிடித்த சீதாலஷ்மியின்
மகள் ஸ்ரீலலிதாபாரதியை பாணிக்கிரகணம் செய்து
இல்லற தர்மத்தின் ஒளிச் சுடர்களாய்
சிரேஷ்ட புதல்வி கிருத்திகா, கனிஷ்ட புத்திரி சுமத்ராவோடு
பேர் சொல்ல ஒரு பிள்ளையாய் ரகுராமை
ஈன்றுஉவந்து வான் புகழ் வாழ்க்கை தந்தாய்

மின்னியல் பொறியியலாளராய் மிளிர்ந்த உன் வாழ்வின்
மீதி நேரமானதை மிக நேர்த்தியாய் செலவு செய்தாய்,
வேத ஆகம வழிவந்தோர்க்காய் சேவை புரியும்
வேதாகம சபாவின் தலைவராய் சிலகாலம்,
இலங்கையின் வடகிழக்கின் சிவநெறி பாடசாலைகள்,
பட்டினியால் வாடும் அனாதை சிறுவர்களுக்காய்
ஒரு பானை தொண்டு ஸ்தாபனம், தமிழர் தகவல் நடுவம்,
உலகத் தமிழர் ஒன்றியம் கனடாவின் ஸ்தாபகராய்

நீ ஆற்றிய சேவைகளும் காட்டிய வழிகளும் பல பல
இத்தனையும் செய்து இன்புற வழிகாட்டினாய்,
இன்று காலன் பாதம் பற்றி விரைந்தது ஏனோ.
அனாதை சிறுவர் பலருக்கு அரணாய் இருந்த நீர்,
அந்த வியாழன் மாலையோடு விடைபெற்று சென்றதும் ஏன்?
மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்
விக்கித்து நிற்க சிவபதம் அடைந்தீரோ?

"உம் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போம்."
"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

**— வேதாகம சபா, ஐக்கிய இராச்சியம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Remembrance of a Fellow Student -Ram Subramanian from University Days

Engineering students of Peradeniya from 1970 December to 1975 February (EFac7075) fondly called Subramania Iyer for admiration of his moral values. A common man in public life, Subramanian lived privately like a Brahmin. News of his unexpected demise is a shock to our batch mates and all of us are sad.

He joined our class in 1972, completed his degree with us in 1975 and continued working as an Instructor in the same place with some of us. Dr Arul Britto's first recollection was of meeting Subramanian, one of the few early birds for lectures and chatted about all and sundry. Subramanian impressed people with his gentle giant of great stature, soft spoken and a much laid back personality with his characteristic smile. Subramanian realness of relating his family members with his interest imprinted Arul where Arul explained the exhibits in the soil laboratory to entire family members of Subramanian on the faculty open day in 1975.

Recently Arul linked to Ram on skype. Despite his recent illness, he never alluded to the fact or made an issue of it. Upon recent return from Sri Lanka, Ram was so moved by the sorry state of the displaced children and he started a project to help some of these children. Of course, he left his smiles; kindness, sincerity and dedication with us to remember forever. Friends and community always well received him. He also built a good rapport with some of the electrical engineering lecturers and supported their cause for social changes. He had done a lot to the wider community in Sri Lanka and he had been serving them with his association and friends when he was in UK. He was closely netted with us



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

even in his last days. We lost a credible friend and social reformer.

He instructed the second year electrical engineering students in their course work jointly with Sarath in 1975. During breaks he opined various thoughts including cultural differences between east and west with his characteristic smile and with a bit of laughter. Sarath is sad by the sudden departure of that pleasant face. Kumarasena, another batch mate from electrical engineering group stressed that he was a very open minded person who clearly articulated issues related to minorities with the reflection of socialist thinking. One of our batch mates, Prof Sritharan appreciated his hospitality in 1980 when he and his friends stayed with Subramanian in Edinburgh. His second year group mate, Santhira who met Ram in England and Australia is dismayed of speaking out about his bonding with Ram's family.

Needless to say our every sympathy goes to the immediate family to his wife Lalitha and his three children where the loss of husband and father at such a relatively young age is a great sorrow that will not go away.

Please accept our sincere heartfelt condolences from his Engineering batch (University of Ceylon, Peradeniya) from 1972 to 1975. Every one of us prays for his eternal bliss.

**- Compiled on behalf of EFAC7075 by Karunakaran**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராம் சுப்ரமணியம்

அன்புடை சோதரி **லலிதா**
ஆருயிர்க் கணவன் ஏனோ
விண்வழி மீளாப்பாதை
விருட்டென்று மறைந்து விட்டார்!
நின்மனத் துயரத் தீயை
நீர்விட்ட கண்ணை யாரே
என்சொல்லித் தேற்ற லாகும்,
எப்படி மாற்றக் கூடும்!

பிள்ளைகள் நலனுக்காக
பிறப்பிதன் பயனுக்காக
உள்ளதை உணரவேண்டி
உலகியல் தொடர்வுக்காக
வல்லிய விதியை ஏற்று
வருதினம் தொடரவேண்டி
மெல்லிய மொழியால் ஞானம்
மெய்ப்பட வேண்டு கின்றோம்!

ஓதுவார் அறியார் உண்மை
உணர்ந்தவர் உரைக்க மாட்டார்!
தேடுவார் திகைப்பார் தெய்வம்
திணித்தது துயரம் என்பார்,
ஆதலால் விதியே என்பார்,
அவசரப் பூசை செய்வார்,
பாதியில் மறந்து மீண்டும்,
பாழ்மனப் பரப்பில் மேய்வார்!

காலமும் மனமும் பொய்யே
கடவுளும் விதியும் மாயம்!
ஆழ்மனம் உணரத்தேடில்
ஆன்மனே கடவுள் ஆகும்
ஞானமே நயக்க வேண்டும்!
நயந்தவர் நமது வாழ்க்கைப்
பாடமே படிக்க வேண்டும்,
படித்தது பயக்க வேண்டும்!

மனிதராய்ப் பிறந்த தாலும்
மற்றவர் சுற்றத் தாலும்
இனிமையாய் இருக்க வேண்டும்
இன்றொரு நாளே ஆயுள்
என்பதாய் நினைத்து நன்மை
எடுத்தது நிரப்ப வேண்டும்
துன்பமும் மற்றோர் குற்றத்
தோற்றமும் விலக்க வேண்டும்!

இறப்பதைப் பார்த்து இங்கே
இருப்பவர் பிறக்க வேண்டும்!
மறுப்பதை மறுத்து நல்ல
மனத்தினால் சிறக்க வேண்டும்!
பயணமோ முடியா ததனால்
பாதையோ தெரியா ததனால்
இயல்கின்ற வரையில் உறவு
இனிமையாய்க் காக்க வேண்டும்!

எளிமையால் இயல்பால் அன்பால்
இருந்த**ராம் சுப்ர மணியம்**
வலிமையாய் இதயக் கோவில்
வாசனாய் இருந்து செல்வச்
செழியனாய் ரகுராம், பாவைச்
சித்திரமாய் அன்புப் பெண்கள்
இனிமையாய் சுகித்து வாழ
இறைவனாய் இருக்கச் சென்றார்!

ஆதலால் சோதரி லலிதா
அழுதபின் எழுக! ஞானம்
மேதலால் எழுக! உறுதி
மெய்ப்பட எழுக! உண்மைக்
காதலால் ராமோ உந்தன்
கண்களுள் வாழ்வார் அதனால்
சாதலால் எரியும் துன்பம்
சாகட்டும்! **விரியும் சாந்தம்!**

**- அன்புடன் ராஜகோபாலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ram Subramaniam:
## An Appreciation

Ram Subramaniam, a committed peace and human rights advocate, has passed away on Thursday, 30th August 2012 following a heart attack at the age of 60.

Ram always positioned himself firmly on the side of the poor and the deprived. Involved with the Tamil Information Centre (TIC) for over 15 years, he has worked tirelessly in TIC's community development activities. He led the Educational initiative of the charity "Centre for Community Development (CCD)" in the northeast Sri Lanka for the last two years. His benevolent and wise leadership has helped to develop CCD's post-war support to pre-school education programme in the war affected areas of northeast Sri Lanka.

Ram was a generous and warm person and a great friend. His human relationship was founded upon kindness, decency and respect. An amazing man with lot of energy, wisdom and personal drive to succeed in whatever he did, he turned setbacks into opportunities.

He was not a man of mere words but a man of positive and concrete actions. Soft spoken, he would come with new ideas and new ways of operating. His contribution to the community was enormous but he had always kept a low profile. He is one that can always be counted when it came to support for charitable causes.

The two organisations, TIC and CCD, were very fortunate to have a leader like Ram. His unexpected and untimely death is a great loss to these and the community. It had left a deep void that is difficult to fill.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ram's legacy inspires us to live generous, honest, kind, decent, progressive and purposeful lives. He will forever be remembered for his remarkable strength, generosity and sincere concern and commitment to the under-privileged and the downtrodden.

Ram Subramaniam is survived by his loving wife Lalitha, daughters Krithika and Sumithra and son Raguram.

*Donations in his memory may be made to his favourite charity – Sivaneri Padasalai, Jaffna*

*For further information about the charity, please contact Dr.Nanthakumar - sivananthu3@yahoo.com - Tel No +94772208967 or wife Lalitha at 35 Belmont Road, Bushey, WD23 2JR : Tel: 01923 226403*

**Tamil Information Centre &**
**Centre for Community Development**
**Thulasi**
**Bridge End Close**
**Kingston Upon Thames**
**KT2 6PZ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதருள் தெய்வமய்யா மனங்களில் நீங்காத உருவமய்யா**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்து வானுறையும்
தெய்வத்துள் கலந்துவிட்ட திருவுருவே எங்கள் ஐயா
மற்றவர் நலனில் என்றும் அக்கறை கொண்டுழைத்த
மனிதருள் தெய்வமய்யா மனங்களில் நீங்காத உருவமய்யா

அன்பின் திருவுருவே அறிவின் சிகரமே
பண்பால் நிமிர்ந்துயர்ந்த பசுந்தளிரே
கண்ணாய் எம்மினத்தை காக்க வந்த காவியமே
மண்ணிலே பற்றுடனே மானிடரை மதித்தவரே

தாயாகி எமை அணைத்து - தனம்
தந்துயர்ந்த இறைமகனே
வாயால் கூற வார்த்தையில்லை
வானுயர்ந்த சேவைதனை

திக்கற்றவர்க்கு உதவும் தெய்வமாக
தினம்தினம் உழைத்த திருநிறை செம்மலே
ஓய்வுறக்கமின்றி ஓடித்திரிந்த நின்பாதம்
ஒருபோதும் இம்மண்ணில் உலா வரமாட்டாதா?

ஏழைகளின் தோழனாக எம்வீட்டு வாசல் வந்து
நாளை விடியும் நற்காலம் பிறக்குமென்று
வாழ வழி செய்த எங்கள் வள்ளல் பெருந்தகையே-நீர்
வாடி விட்ட செய்தி எம்மை வாட்டி வதைக்குதய்யா

கஷ்டத்தில் நாம்வாட மனந்தேற்றிக் கரம்கொடுத்து
கருணாநிதியால் எமது கண்ணீர் துடைத்தீர்கள்
கால தேவன் உங்களை கவர்ந்து கொண்ட போதிலும்
காலமது உள்ளவரை கருணை முகம் நிழலாடும்

உங்களது குரலோசை உயிர்ப்புடனே இருக்குமய்யா
வஞ்சகமே இல்லாத வார்த்தையுமே இனிக்குமய்யா
வானலையில் எப்போதும் வழங்கி நின்ற அறிவுரைகள்
வாழ்நாளில் எம்முடனே வந்துகொண்டே இருக்குமய்யா

எங்கெங்கே எம்மினத்தார் வறுமையிலே வாடுகின்றார்
அங்கெல்லாம் முன்வந்து உதவிடுவோம் என்றுரைத்து
வடக்கு கிழக்கெங்கும் வழிவகைகள் செய்திட்ட
வல்லவரே நல்லவரே வணங்கி வழி அனுப்புகின்றோம்

போய்வருக பெருந்தகையே புகழ் மணக்கும் என்னாளும்
நேசமுடன் உதவி செய்த நெஞ்சங்கள் நினைந்திருக்கும்
பாசத்தால் தாயான பரிவு நிறை திருமகனே
இறைவனடி கலந்து இன்புற்று வாழ்ந்திடுக!

**- இம செல்வராஜா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரித்திர நாயகன் சுகு

நற்றமிழ் வளர்த்த நல்லூர் பெற்றெடுத்த புகழ்பூத்த பெருமகனே !

கற்றறிந்த காலத்தின் கலங்கரை விளக்கே காலன் கண்பட்டீரோ !

சிவத்தோடு தமிழ் வளரச் செய்திட்டசெயல் வீரச் செம்மலே !

செந்தண்மை பூண்டிட்ட அந்தணரே செகம் விட்டுப் போனீரோ

தேடிய பொருள் எல்லாம் ஏதிலர்க்காய் நாடியே வந்து நல்கினீரே !

வாடிய பயிர்க்கெல்லாம் வானத்து நன்மழை போல் வழி காட்டினீரே !

மீகாமன் இல்லாக் கப்பல்போல் துயரக் கடல் தன்னில் துவழ்கின்றோம்

சாகாவரம் பெற்றிடுவீர் ! சரித்திரத்தில் என்றும் நிலைத்திடுவீர் !

**– சிவத்தமிழ் மானிட விடியற் கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு ராம் சுப்ரமணியம்

வாழ்க்கை இருள் இன்றி ...
ஒளிமயமாய் இருந்திடவே ...
அகல்விளக்காய் ஒளி தந்து— இன்று
நாம் மல்கும் கண்ணீரோடு...
விளக்கேற்றி தொழுதிடவே ...
காலமாகிவிட்ட ராம் ஐயாவுக்கு
கண்ணீர் அஞ்சலிகள் ஆயிரம் ...

நால்லதொரு கணவனாய்
கரம் பற்றிய காலம் தொட்டு
குடும்ப கூட்டை உங்கள் பாச சிறகால்
தாங்கி வழிநடதிநீர்களே ...
பெற்ற பிள்ளைகள் பெருமை கொள்
நிலை கண்டு வாழ்வுயர ...
உற்ற துணையாய் நின்று ...
கற்றல் கொடுத்தீர்களே ...
நீங்கள் இன்றிய வெறுமை கொண்டு
நிழல் இன்றி வாடும் அவர்கள் சார்பாக
ஆத்மா சாந்தியடைய ஆழ்ந்து வேண்டுகின்றோம்

நீங்கள் கற்ற கல்வி உங்களோடு போகாமல்
தாய்நாட்டிலும் பலர் சிறக்கவேண்டுமென்று
சேயாக அவரை அரவணைத்து கல்வி கொடுத்தீர்களே
உங்கள் பெயர் சொல்லி கற்கும் பிள்ளைகள் சார்பாக
கண்ணீர் அஞ்சலிகள்

கலையும் ஓர் கண்ணென்று கண்டு
அது சிறக்க உழைக்கும்
கலைஞரை தேடிச்சென்று
கலை வளர்க்க கரம் கொடுத்தீர்களே
அவர்கள் சார்பாக அஞ்சலிகள் ஆயிரம்
உங்களை இழந்த குடும்பத்து துயர் கொண்ட
சோகங்கள் நீங்கி சாந்தி கொள்ளட்டும்
ஆழ்ந்த அஞ்சலிகள்

— Swindon தமிழ் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ram Subramaniam

When Ram Subramaniam was taken from our midst so suddenly, Oru Paanai lost one of it's most valued and respected members. Our charity was set up in 2008, with the sole aim of feeding the most needy children attending some of the worst affected schools in northeast Sri Lanka. It was Ram, who had a great passion for supporting educational activities in the Wanni, who drew our attention to the pressing needs of children there, who were struggling to attain the required standards in English, maths and science and needed urgent assistance with additional tuition classes. Although there were many idealistic individuals living in the northeast who were very keen to run these classes, their efforts were hampered by a lack of resources. Ram, with his easy charm and sincere approach, managed to persuade the Oru Paanai committee to take on the worthy cause of supporting these deserving students , under the banner Oru Paanai Education. As it was evident to us that Ram was the ideal person to lead on this project, we appealed to him to take on OP Education as his remit and supervise the allocation of the funds raised for the purpose and ensure that the funds were utilised properly and regular reports obtained from the volunteers in Batticaloa, Vavuniya and Jaffna. He set about his task with great enthusiasm and it was less than a month ago that we received from him, comprehensive and impressive reports from RHYTHM, Mahadeva Padippaham and AUSTD on how the monies were being spent by them on diverse and very deserving educational support activities in the north east. We felt that we could now rest easy as OP Education was in Ram's very capable hands , but Fate has decreed otherwise.

Ram Subramaniam was associated with OP for a relatively short time, but it was only the latest charity that Ram has



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

been involved with . He had a long track record of helping the less privileged in society in many different settings, both in England and Sri Lanka. He has also inspired other members of his family to follow in his footsteps and his two daughters, Krithika and Sumithra , climbed Kilimanjaroo along with their uncle , Prof. Swaminathan, one of our keenest supporters, to raise funds for OP, and their combined efforts resulted in over £ 6 ,000 being raised for our charity in February this year.

The Oru Paanai committee feels very privileged to have been associated with Ram in the past two years , as he was a visionary who threw himself into every task with great enthusiasm. Although Ram is no longer with us, his legacy will live on in the form of Oru Paanai Education , and the best tribute we can pay Ram, who was so committed to uplifting educational standards in the northeast, is to ensure that his dream lives on into the distant future.

**- Oru Paanai UK Committee.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mr. Ram Subramaniam
## An Appreciation

When I accepted the chairmanship of the Sri Lankan branch of a Language venture as Oru Paanai in 2011 the focus was on feeding malnourished children in schools affected by and recovering from the 27 year old conflict. From 20,000 beneficiaries in 175 schools in 2011, the numbers grew to 33,000 children from 300 schools in 2012. At a meeting of the trustees that I attended in Milton Keynes in May this year I met Ram for the first time. In a gentle and yet assertive way he drew our attention to the appalling state of education in some of the schools he had visited in the East and got spontaneous approval for the financial support he requested. Clearly a man of not only vision but also action, Ram flew to Sri Lanka, thereafter at his own expense, with his ever supportive wife Lalitha to revisit these schools. The purpose was to implement a mechanism to ensure that the funds deployed were appropriately utilized. On a monthly basis he then sent me the relevant details for disbursement the last of which reached me at the end of August. In it he mentioned that he would discuss his further plans with the Trustees on my visit to the UK in late September. The contents of Swami's Email the following morning shattered and shocked me !. I sat in a mute reflection on life and its inglorious uncertainties, trying to figure out why lives that are engaged so meaningfully in the interest of the needy are taken away without warning from a world that so desperately needs them. That question will never be answered but at least we know that Ram is at total Peace in a blessed environment.

**S. Skandakumar**
**Chairman**
**Oru Paanai Trust - Sri Lanka Branch**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Remembering Ram Subramaniam

Ram Subramaniam was a multifaceted man who easily and pleasantly combined his multiple roles as a family man, an accomplished professional, and a voluntary activist with selfless generosity. Anyone who new Ram would know that he did not live in compartments but seamlessly connected his different roles while distinctly preserving the integrity of each sphere. His family, his profession and his voluntarism were informed by one another and were enriched by one another. His contributions to family life, professional work and the voluntary sector were also marked by the highest standards of commitment, competence and compassion. None of this should come as a surprise to anyone who knew Ram and his family. But it is edifying for those of us still reeling under the shock of his sudden and untimely death to remember everything about him that made Ram Subramaniam so exceptional in life and makes us miss him so much after his death.

I first came to know Ram Subramaniam and his older brother Mahalingam when we were engineering students in Peradeniya in the late 1960s and early 1970s. Ram was also a classmate of my younger brother, Manoharan. As fellow students, we came to know of them as sons from a respected Brahmin family in Nallur, Jaffna. Their father, Ramaswamy Iyer, was known for his learning, love of knowledge and progressive world views. The two brothers excelled in their studies with Mahalingam finishing his degree in Mechanical Engineering and Ram obtaining a degree in Electrical Engineering. Mahalingam went on to become an engineering academic in Australia, while Ram specialized in telecommunication and systems engineering and built a successful professional career, working for over ten years in Montreal and Ottawa in Canada, and then in London England,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for the last 22 years. One of the highlights of his professional career was the leadership role he played in developing national, regional and international standards, regulations and policies in the telecommunication sector.

After Peradeniya, our paths had gone different ways until I received an email out of the blue from Ram two years ago. I had by then settled down in Canada and Ram emailed me from London, England. The war in Sri Lanka was over and Ram was contacting me to get involved in some of the initiatives of the Tamil Information Centre (TIC) that Ram was associated with. Ram knew of my political views and my close association with the late K. Kandasamy, lawyer and founder of the TIC and scores of other initiatives to help the beleaguered Tamil community. I was both surprised and delighted by Ram's email and readily agreed to get involved. After that the two of us together with V. Varadakumar, the tireless coordinator of the TIC, were in constant contact through email, telephone and skype. Ram visited our home in Canada in 2010. I was to visit them in London on two occasions but I could not make the trip on either occasion. Through our skype calls we exchanged information about our families and mutual friends.

Of the many initiatives that were considered by the TIC, Ram's heart was set on education, especially focusing on pre-school programs to help children in postwar northeastern Sri Lanka. There were other initiatives that we identified as necessary for the slow and systematic rebuilding of the Tamil areas and Tamil society that had been devastated by the war. He used his impressive network of contacts among Tamil professionals in the diaspora to find resource support for these initiatives. We coordinated our independent visits to Jaffna twice in the last two years to establish contacts among professionals, the university community and non-governmental organizations in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jaffna. We followed up our visits, comparing notes and discussing next steps in a number of areas.

Ram Subramaniam was a *Karma Yogi,* committed to action in pursuit of selfless service. True to his roots and background, he set his sights in doing whatever he could to help the Tamil community in Jaffna and the rest of northeast Ilankai recover from a devastating war in which the people had been for the most part silent sufferers. Many of the same people are continuing to suffer - as orphaned children, as people without eye sight or limbs, as young widows and mothers, as adults without family support, and as displaced people. Ram had an impressive array of statistics on the different categories of people who are yet to be redressed. The herculean task of rebuilding has hardly begun. Ram would have been a central figure in building momentum and producing results. His sudden death has left a huge void that would be impossible to fill.

The best way to remember Ram would be to continue to do all that we could do to compensate for his absence and to carry on with the initiatives started. Those of us who knew him personally are saddened by his death and more so because of our realization that it was our privilege to have known him in our lives and to have worked with him in common pursuits. We extend our deepest sympathies to his wife and children and to his siblings.

Thursday, September 06, 2012
Waterloo, Canada

**- Rajan Philips**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணாவின் மறைவு

செய்தி கிடைத்து ஒரு வாரமாகின்றது. இன்னும் உள்ளம் உண்மையை ஏற்க மறுக்கின்றது. வெள்ளி காலை வீரா தொலைபேசியில் சொன்னவுடன் கூட இப்படித்தான். பொய்யாயிருக்கக் கூடாதா இந்தச் செய்தி. வீரா தனக்குக் கிடைத்த தகவலைத் தவறாக விளங்கிக் கொண்டிருப்பாரா? மனம் தனது விருப்பத்திற்கேற்ப செய்தியைப் புரிய முயல, கை 'skype' இல் 'ராம் சுப்பிரமணியம்' என்ற அண்ணாவின் பெயரை மீள மீள அழுத்திக் கொண்டிருந்தது. எத்தனை முறை அழுத்தினாலும் "off line". Dr.நந்தகுமாரின் அடுத்த அழைப்பு வீராவின் செய்தியை உறுதி செய்தது. "Head set" இனை காதில் மாட்டியவுடன் ஒலிக்கும் "ஆ ... வணக்கம் ... எப்படி?" என்ற அண்ணாவின் குரல் இதை எழுதும் போதும் எனக்குள் ஒலிக்கின்றது. என் உயிருள்ளவரை அது ஒலிக்கட்டும். "முற்றும்" என்ற செய்தியைச் சொன்ன வீரா தான், அண்ணவுடனான நட்பையும் ஆரம்பித்து வைத்தார்!

அண்ணாவுடன் அறிமுகம் இரண்டு வருடங்களாகத்தான்: அந்த ஆரம்ப நாள் நன்றாய் நினைவிருக்கின்றது. அதுவும் ஆகஸ்ட் மாதம் தான். ஆனால் 2010. அண்ணா கற்ற பரமேஸ்வராக் கல்லூரியின் பழைமை கூறும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவுக்கு முன்பாக உள்ள அசோக மரமொன்றின் அருகில் எமது சங்கத்தின் தலைவர் தங்கராஜாவுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது வீரா வந்து சொன்னார்:

*"லண்டனிலிருந்து ஒரு ஐயா வருகின்றார். அவர் இந்தியாவில் இருந்து அழைத்து வரும் இசைக் குழவொன்றின் கச்சேரியையும் பயிற்சிப் பட்டறையையும் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும்"*

இப்படித்தான் ஆரம்பித்தது எங்கள் உறவு.

அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவர்களின் ஆதரவுடன் நிகழ்ச்சியைப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்ய, செப் 1, 2 (2010) இல் கச்சேரியும் பட்டறையும் அமோகமாய் நடந்தன.

அன்று தொடக்கம் வாரம் ஒரு தடவை அல்லது இருவாரத்தில் ஒரு தடவையாவது skype இல் உரையாடுவோம். 2010 நல்லூர் பெருவிழாவிலும் யாழ்ப்பாணம் வந்து சமூக ஆர்வலர்களையும் உதவி பெறும் மாணவர்களையும் சந்தித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடம் பெருவிழாவும் லண்டன் ஒலிம்பிக்கும் ஒரேசமயம் நிகழ, அடுத்த மாதம் வரை அண்ணாவின் வருகைக்காகக் காத்திருந்தோம்.

இரண்டு வருடங்களில் 19 பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இரண்டு பாடசாலை மாணவர்களுக்கும் மாதாந்த உதவித்தொகை, மற்றொரு பாடசாலை மாணவிக்கு துவிச்சக்கரவண்டி, கற்றலுக்கான நிதியுதவி, தற்காலிக விரிவுரையாளர் ஒருவர் இந்தியாவில் சட்ட மேற்கல்வி பயில கட்டணத் தொகை என... அண்ணாவால் ஊழியர் சங்கத்துக்கும் பெருமை!

இங்கு வேறு சமூக நலன் விரும்பிகளுடன் தொடர்புகளை அண்ணா ஏற்படுத்த எம்மால் முடிந்தவரை உதவினோம். இப்படித்தான் கலாலயா பயிற்சியகம், Gatherpage.com, கோழிவளர்ப்பு, போதனா வைத்தியசாலைக்கு நூல்கள், என அண்ணாவின் பணிகளும் எமக்கு அறிமுகமாகின. ஆரம்பப் பள்ளி சிறார்களுக்கு அண்ணா உதவ விரும்பிய போது சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தை அறிமுகம் செய்தோம்.

வளமான பல எதிர் காலத்திட்டங்களை அவர் கொண்டிருந்தார். நம்பிக்கை நிதியமொன்றை உருவாக்கல். அதிகரித்த அளவில் பட்ட மேற்படிப்புக்கு உதவுதல் திறன் விருத்தி பயிற்சிகளை மேற்கொள்ள உதவுதல் என்பன குறித்து எம்முடன் உரையாடியிருந்தார். நாம் எமது கற்பனை சிறகுகளை அகல விரித்து காத்திருந்தோம்.

அண்ணாவின் அழகு. ஆஜானுபாகுவான தோற்றம், அறிவு, நிதானம்,- வேத பாரம்பரியமும் பொதுவுடமைவாதியான தந்தையின் சிந்தனையும் இணைந்த அற்புதமான கலவை அவர். தெளிவான குறிக்கோள், தொலைநோக்கு, பரந்த தகவல் தொடர்புத் தளம், உணர்வுபூர்வமாக அன்றி அறிவுபூர்வமாக விடயங்களை அணுகும் - ஆனால் மிக நேர்மையாக அணுகும் நேர்த்தி இவை எல்லாம் எம்மை வெகுவாக கவர்ந்தன. எமக்கூடாகத் தான் இந்த உதவிகளை ஆற்ற வேண்டுமென்ற அவசியம் அவருக்கில்லை. இங்கு சிவில் சமூக அமைப்புக்கள் பலம் பெற வேண்டுமெனக் கருதியே எமக்கு நீட்டிய அவரது ஆதரவுக் கரத்தை உறுதியாகப்பற்றி நின்றோம்.

உதவிகள் உரிய வகையில் பயன்படுத்தப்படுகின்றனவா? என்பதைக் கண்காணிக்க ஏற்பாடுகள் செய்தார். உதவி பெறும் மாணவர்கள் பிற்காலத்தில் பிற மாணவருக்கு உதவ வேண்டும் என்ற தனது எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்தியிருந்தார். ஒரு விடயத்தை உரையாடும்போது நல்ல செவிமடுப்பவர்களாக (Good Listeners) இருக்காமை எம்மவர்களின் மிகப் பெரிய குறைபாடு என்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவின் மறைவு அவர் பிரதிநிதித்துவம் செய்த சமூக அபிவிருத்தி மையத்துக்கும் (CCD) பாரிய இழப்பாகும்.

அண்ணாவின் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மற்றும் உறவினர்களுக்கும் அண்ணாவின் செயல்களுக்கு கிடைத்த புகழஞ்சலிகள் ஓரளவுக்கேனும் ஆறுதலைத் தருமென நம்புகின்றோம்.


*"ஒரு பெருந்தகையுடன் நெருங்கி வாழ்ந்த நீங்கள் அனைவரும் பாக்கியசாலிகள்"*

நன்றி


**சி.கலாராஜ்**
**பல்கலைக்கழ ஊழியர் சங்கம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைகழகத்தில் நடைபெற்ற கண்ணீர் அஞ்சலி கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட பிரதி விம்பங்கள் கீழே காணலாம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்து விநாயகர் ஸ்துதி

ராகம்: ஆனந்தபைரவி
தாளம்: ஆதி

பல்லவி

முத்து விநாயகனே அருள்வாய்
முத்து முத்தான பாடல்
முக்கண்ணன் சிவனைப் பாட

அனுபல்லவி

கத்தும் குயில் இசைக்கும்
கவின் நல்லூர் பதியிலே
கமலாம்பிகை தழுவும்
கைலாச நாதனைப் பாட

சரணம்

மதாபிதாவை தொழுது
மாங்கனி பெற்றவனே!
ஆதாரம் நீதானையா!
அந்தாதி பாட அருள்
மேதாவி விநாயகனே
மேருவில் பாரதம் தந்தாய்!
வேதாகமம் போற்றும் நாதா
வேழமுகத் தோனே நல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் முகம் பாரய்யா

ராகம்: அமிர்தவர்ஷிணி தாளம்: ஆதி

இயற்றியவர்: யாழ்ப்பாணம் வீரமணி ஐயர்

என் முகம் பாரய்யா ஷண்முகனே — என்றும்
உன் முகம் கண்டிட உருகி தவித்தேன் அய்யா

நின் முகம் இன்றி இந்த நிலத்தில் துணையும் உண்டோ
பன்னிரு கையனே பார்வதி மைந்தனே

அருள் அமிர்த மழையை அகப்பையினில் பொழியும்
ஆன்ம வயல் செழிக்கும் அன்பர் வினை அழிக்கும்

திருவளர் நல்லை நகர் திரு முருகையா — உந்தன்
திருவடி நம்பினேன் திக்கு வேறில்லை அய்யா

## பாஹிமாம் ஸ்ரீ

ராகம்: ஜன ரஞ்ஜனி தாளம்: ஆதி

பல்லவி

பாஹிமாம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கிருபாகரி சங்கரி

அனுபல்லவி

எஹி சுகம் தேஹி சிம்ஹ வாகினி தயா ப்ரவாகினி மோஹினி

சிட்ட ஸ்வரம்

பா, ப ம ரி ஸா, த ப ப ம ம ரி ரி ஸா, ரி ஸ ரி க மபா, ப
ஸா ரி கம பா த ப ம ப த ப நி, ஸ ப நி ஸ ரி ஸ ரி க ம ரி
ஸா ஸ த ப ம ரி, ஸ ரி க ம

சரணம்

பண்ட சண்ட முண்ட கண்டணி மகிஷ பஞ்சனி
– ஜன ரஞ்ஜனி நிரஞ்ஜனி
பண்டித ஸ்ரீ குஹ தாச போஷிணி சுபாஷிணி ரிபு
– பிஷணி வர பூஷணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறை ஒன்றும் இல்லை

ராகம்: ராகமாலிகா தாளம்: ஆதி

குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா (சிவரஞ்சனி)
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா (X2)

கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா

வேண்டியதைத் தந்திட வேங்கடேசன் என்றிருக்க
வேண்டியது வேறில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா

திரையின்பின் நிற்கின்றாய் கண்ணா (காப்பி)
கண்ணா திரையின்பின் நிற்கின்றாய் கண்ணா — உன்னை
மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பார்
திரையின்பின் நிற்கின்றாய் கண்ணா - உன்னை
மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பார்
என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா (X2)
குன்றின்மேல் கல்லாகி நிற்கின்ற வரதா (X2)
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா (X2)
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா

கலிநாளுக்கிறங்கி கல்லிலே இறங்கி (சிந்துபைரவி)
நிலையாகக் கோவிலில் நிற்கின்றாய் கேசவா
கலிநாளுக்கிறங்கி கல்லிலே இறங்கி
நிலையாகக் கோவிலில் நிற்கின்றாய் கேசவா
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா
யாதும் மறுக்காத மலையப்பா
யாதும் மறுக்காத மலையப்பா உன் மார்பில்
ஏதும் தர நிற்கும் கருணைக் கடல் அன்னை
என்றும் இருந்திட ஏது குறை எனக்கு (X2)
ஒன்றும் குறையில்லை மறை மூர்த்தி கண்ணா (X2)

மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Thank You for Your Thoughts & Help

Family of Ram Subramaniam thank all those who attended Ram's funeral, sent floral tributes and sent messages of sympathy by e mail, post, telephone etc and helped and supported us in many ways at this difficult time.

**Lalitha, Krithika, Sumitra, Raguram & Sister, Brothers, Brother-in-law,Nephews and Nieces.**

### நன்றி நவிலல்

எமது அன்பின் கோவிலாக, பாசத்தின் கோபுரமாக இருந்த எமது குடும்பத் தலைவனின் இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும், சகல விதத்திலும் அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும், மற்றும் சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அயலவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

### நன்றி

**இவ்வண்ணம்**
**மனைவி, பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஜகோவிந்தம்**

சொந்தம் பந்தம் என்பதெல்லாம் என்ன ?
சிந்தித்துப்பார்த்தால் யாவும் விந்தையே
ஈருடல் ஓருயிராய் இருக்கும் மனைவி யார் ?
உன் வம்சத்தை வளர்க்க வந்த மகன் யார்?
நீ யார் ?
யாருடையவன் நீ ?
எங்கிருந்து வந்தாய் ?
இவற்றை நன்றாக சிந்தித்து யாவும் மாயையென உணர்வாய்
உயிருக்கு ஊரில்லை, பெயரில்லை, உறவில்லை, குலமில்லை

**—சங்கரர் பஜகோவிந்தம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



இருந்தேன், இருகிறேன், இருப்பேன்

இருந்தாய், இருக்கிறாய், இருப்பாய்

இருந்தார், இருக்கிறார், இருப்பார்

இப்படி இருப்பதும் இறப்பதும் என்றும் நடப்பதே

உடலைவிட்டு உடலுக்கு மாறி மாறிச் செல்லும்

உயிர்களுக்கு என்றென்றும் அழிவில்லை

இதுவே இயற்கையின் நியதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org